1968, மார்ச் 5]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாம்ராஜநகருக்கும் சத்தியமங்கலத்திற்குமிடையேயுள்ள ரயில்பாதையைப்பற்றி கனம் எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கேட்டார்கள். கன்னட மக்களோடு எவ்வளவு தொடர்புடையவராக இருக்கிறார் என்ற அவரது உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The Salem-Bangalore Railway line was taken up many years ago. It is yet in an incomplete condition. Train service has been given up to Dharmapuri and beyond that the service is not quite proper. Will this Government recommend to the Central Government to complete this work as early as possible ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இதுவும் மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும்.

திரு கே. விநாயகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து ஒன்றைக் கூற விரும்புகிறேன். தூத்துக்குடி எழுச்சி நாள் எல்லா கட்சிக்காரர்களையும் கலந்து செய்யவில்லையென்பது அவருக்குத் தெரியுமா? காங்கிரஸ் கட்சியையும் கலந்து, தேசிய ஒருமைப்பாட்டையும் மாநில நன்மையையும் கருத்திற்கொண்டு செய்யலாம் அல்லவா ? அப்படி எங்களைக் கலக்காமல் செய்துவிட்டு, எல்லோரும் சேரவில்லை என்பதில் பொருள் இல்லை. எங்களைக் கலக்காமல் செய்ததால்தான் தூத்துக்குடி எழுச்சி நாளில் நாங்கள் சேரவில்லை.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தூத்துக்குடி பற்றியும் ரயில்வே லைன்கள் எடுக்கக்கூடாது என்று நாம் சொல்லும்போது 'மத்திய அரசு எந்த அளவுக்கு அக்கறையில்லாமல் இருக்கிறது' என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 143. திரு ஏ. சிதம்பரநாத நாடார் அவர்களுடைய வினாவை திரு ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

Sea-erosions at Colachel Port.

***143 Q.—THIRU R. PONNAPPA NADAR** (on behalf of Thiru A. CHIDAMBARANATHAN NADAR) : Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(*a*) whether the Government are aware that there are frequent sea-erosions at Colachel Port and surroundings ; and

(*b*) the steps taken by the Government to avert the rigours of erosion ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) கொளச்சல் துறைமுகப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கொளச்சல் துறைமுகப் பகுதிக்கு அருகாமையில் விடாரம் போன்ற பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. அதுபற்றி மாவட்டக் கலெக்டரிடமிருந்து ரிப்போர்ட் ஏதேனும் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி கேள்வி கொளச்சல் பகுதியைப் பற்றியது. 29-9-1966-ல் மாவட்டக லெக்டர் அவர்கள் கடல் அரிப்புப் பகுதிகளையும், கடற்கரைப் பகுதிகளையும் நேரில் பார்வையிட்டு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் அண்மையில் கடல் அரிப்பு ஏற்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு போதுமான நிவாரணம் அளிக்கப்படவில்லை. அந்தப் பகுதி மக்களுக்குப் புதிய வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசாங்கத்திடம் உண்டா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : கொடுத்த கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை.

Dr. H. V. HANDE : Sir, we are given to understand that in quite a few areas sea-erosion has taken place. Will this Government tell us the steps taken generally to prevent sea-erosion ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : கடல் கரைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, அதாவது சுமார் 20 லட்சம் ரூபாய் செலவிலே "கடல் அரிப்பு பாதுகாப்பு திட்டம்" என்ற பெயரிலே ஒரு திட்டத்தை ஏற்படுத்த இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே திட்டமிடப்பட்டு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற குறிப்பு இருக்கிறது. ஆனால் இந்தப் பணம் இன்னும் நமக்கு வந்து சேரவில்லை. மத்திய அரசால் இன்னும் இதற்கு ஒப்பளிப்பு வழங்கப்படாமல் இருக்கிற காரணத்தால் பணம் வந்து சேரவில்லை. கடல் கரைகளைப் பாதுகாப்பதற்காக அமெரிக்க வல்லுநர் திரு ஹாட் என்பவரை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை அனுப்புமாறு கேட்டிருக்கிறது. சுமார் 20 லட்சம் ரூபாய் செலவு ஆகுமென்று மதிப்பிடப்படுகிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, கொளச்சல் நகரம் கடலுக்கு மிகவும் அருகில் இருக்கிற காரணத்தால் இப்போது கடல் அரிப்பு ஏற்படவில்லையென்றாலும், பின்னால் ஏற்படலாம் என்ற ஒரு நிலை இருக்கிற காரணத்தால், முன்னெச்சரிக்கையாக அப்பகுதிகளில் தடுப்புச் சுவர் எழுப்பும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : கொளச்சல் பகுதியில் மட்டுமல்ல, டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியபடி பல்வேறு பகுதிகளிலும் முன்னெச்சரிக்கையாக தடுப்புச் சுவர் எழுப்பவும், மற்ற காரியங்களுக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் இன்னும் வந்து சேரவில்லை.

திரு ரா. ராமச்சந்திர துரை : கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுக்கு ஒரு
மு. பா. 9-30 முறை புயல் அடிப்பதும், கடல் அரிப்பு ஏற்படுவதும் இயற்கையாக நடந்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்தில் ராமேசுவரம் பகுதியில் புயலால் பாதகம் ஏற்பட்ட நேரத்தில் எச்சரிக்கையாக தடுப்புச் சுவர் ஏன் கட்டவில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். அவர்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்த பிறகு கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்க தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்தை போட்டுள்ளார்களா ? அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இப்படிக் கேட்கிறபோது தான் நாங்கள் ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. உடனே மத்திய சர்க்கார் மீது பழிபோடாதீர்கள் என்கிறார்கள். எங்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு இந்தத் தடுப்புச் சுவர் போடுவதைப்பற்றி நாங்கள் மத்திய சர்க்காரிடத்தில் எடுத்துச் சொல்லி வற்புறுத்தியிருக்கிற அளவுக்கு அவர்கள்—அவர்கள் என்கிறபோது இப்போது உறுப்பினர் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் செய்திருப்பார்களேயானால் இந்த அளவு மோசமாக இருக்காது. அதன் பயனைத் துய்த்துக்கொண்டிருக்கலாம்.

1968, மார்ச் 5]

திரு வ. ஜார்ஜ்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடல் பகுதிகளில் தடுப்புச் சுவர் போட முன்னைய அரசு 20 லட்சம் ரூபாய் திட்டத்தைப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த அரசு கடற்கரையோரப் பகுதிகள் எல்லாவற்றிலும் கடல் அரிப்பு பாதுகாப்புச் சுவர் (போடுவதாக தங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டும் இப்போது) எந்த அளவுக்கு அதிகமாகச் செய்ய முன் வந்திருக்கிறார்கள் அல்லது அதிலிருந்து பின்வாங்கி விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நீள கடற்கரை முழுவதும் சுவர் போடப்போவதாகச் சொல்லவில்லை. பயங்கர அரிப்பு, புயல் ஏற்படுகிற பகுதிகளில் மட்டும் சுவர் போடுகிற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் இருந்து இந்த அரசு பின்வாங்கவில்லை. அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும்.

கோட்டாட்சித் தலைவர் அலுவலகம், உசிலம்பட்டி.

*144 வினு.—**திரு என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலுள்ள கோட்டாட்சித் தலைவர் (R.D.O.) அலுவலகத்தை திருமங்கலத்துக்கு மாற்றும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: இது போன்ற செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

திரு என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கோட்டாட்சித் தலைவர் அலுவலகம் உசிலம்பட்டியில் இருப்பதால் மக்கள் போய் வருவது கஷ்டமாக உள்ளது. ஆகவே அதை டெல்லி-கன்னியாகுமரி பாதையில் உள்ள அந்தக் கோட்டத்திலேயுள்ள மிகப்பெரிய ஊரான திருமங்கலத்திற்கு மாற்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: தற்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னேன்.

DR. H. V. HANDE: Sir, Usilampatti belongs to my leader, Thiru Mookiah Thevar's constituency. May I know whether there was at any time any proposal to transfer the Revenue Divisional Office from Usilampatti to Tirumangalam and if so, the reasons therefor?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: There have been representations, but there is no proposal at present.

கொத்துக்கடலை.

*145 வினு.—**திரு எஸ். ஜே. ராமசாமி:** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1967-ம் ஆண்டில் வெளி மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்கு முழு கடலை இறக்குமதி செய்ய எத்தனை வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு டன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது?

(உ) இதில் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்ட டன்கள் எத்தனை?